DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **STC. NO.347/2023**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.2

Defence

Court

Name : முத்துராமன்
Father/ Husband Name : சோமசுந்தரம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர் .

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.03.2025.
**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது ஆறாவயல் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக 27.10.2018ம் தேதி மதுவிலக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் மீனாட்சி சுந்தரம் அவர்களுடன் நானும், காவலர் ராஜ்குமார் ஆகியோர்களுடன் சிறுவாச்சி பஸ்ஸ்டாப் அருகில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்துகொண்டிருந்தபோது மதியம் 13.00 மணிக்கு சிறுவாச்சி பஸ்ஸ்டாப் அருகே ஒரு இருசக்கர வாகனம் ஹோண்டா ஐசாக் என்ற பதிவெண் இல்லாத வண்டி வந்தது. எங்களை கண்டதும் தப்பித்து ஓடுவதற்காக முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்தோம். பின்னர் பெயர், விலாசம் கேட்டபோது எதிரி விவரத்தை சொன்னார். அவரது வைத்திருந்த பையை சோதனை செய்தபோது 180 மி.லி பிளாக்பேரல் பிராந்தி பாட்டில்கள் இருந்தது. மேற்படி பாட்டில்களை சோதனை செய்தபோது சீல் உடைக்கப்பட்டு மூடி திருகிய நிலையில் இருந்தது.

2. மேற்படி பாட்டில்களை முகர்ந்து பார்த்தோம். நெடிய வாடை வந்தது. எதிரி அரசு அனுமதி இல்லாமல் இலாப நோக்கத்தோடு, மேற்படி பிராந்தி பாட்டில்களை வைத்து விற்பனை செய்ய வைத்திருந்தார். சார்பு ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார். மதியம் 13.15 மணிக்கு எதிரியிடமிருந்து கைப்பற்றிய பாட்டில்களை அந்த இடத்தில் கைப்பற்ற யாரும் சாட்சிகள் முன்வராததால் போலீஸ் பார்டியாகிய எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றி 13.30 மணிக்கு எதிரி ஹோண்டா ஐசாக் வாகனத்தை கைப்பற்றினோம். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை 17.00 மணிக்கு நிலையம் வந்து தேவகோட்டை தாலுகா குற்ற எண்: 236/2018 ஆக வழக்கு பதிவு செய்தார். நாங்கள் உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் கைப்பற்றிய அத்தாட்சியில் நானும், காவலர் ராஜ்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம். கைப்பற்றிய பிராந்தி பாட்டில்களில் நான்கு பாட்டில்களை சீல் வைத்து தனியாக சார்பு ஆய்வாளர் எடுத்தார். அத்தாட்சியில் ஆங்கிலத்தில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. என்னுடையது இல்லை. **(அதே வழக்கு சொத்துக்களுக்கு அத்தாட்சியில் சாட்சி 1ஆக உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அ.த.சா.ஆ.2).** நான் மற்றொரு அத்தாட்சியிலும் கையெழுத்து செய்துள்ளேன். அது டைப் செய்யப்பட்டு இருந்தது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சிறுவாச்சி பஸ்ஸ்டாப் அருகே கடைகள் நிறைய உள்ளது என்றும், பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் சார்பு ஆய்வாளரிடம் சொன்னேன் என்றால் சரிதான். வெள்ளை நிற சாக்கு பையுடன் தான் அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் தயார்செய்தார் என்றால் சரிதான். அத்தாட்சி தாலுகா காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அத்தாட்சி தயார் செய்தபின்னர் தான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. நான் கையெழுத்து செய்த அத்தாட்சியில் குற்ற எண் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், குற்ற எண்ணை பதிவு செய்து அத்தாட்சி தயார் செய்தது தவறு. சம்பவ இடம் போவதற்கு முன்பே வழக்கு பதிவு செய்து அத்தாட்சி தயார் செய்து சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்தவொரு சம்பவமும்

நடக்கவில்லை என்றும், மேல் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றும், சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சியை தயார் செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.